தமிழ்ப் பல்கலைக்கழகச்

# செய்திமலர்

திருவள்ளுவராண்டு 2035 ஏப்பிரல் 2004

## இந்திய வனப்பணி அலுவலர்களுக்கென நடைபெற்ற தமிழ்ப்பயிற்சி

தமிழ்ப் பல்கலைக்கழக இந்திய மொழிகள் பள்ளியும், தமிழக அரசு சுற்றுச் சூழல் மற்றும் (வ.சி.அ) துறையும் இணைந்து 2004 ஏப்பிரல் 12 முதல் 25 வரை 14 நாட்கள் தகுதிகாண்பருவ இந்திய வனப்பணி அலுவலருக்கான சிறப்புத் தமிழ்ப் பயிற்சி வகுப்பினை நடத்தியது. இப்பயிற்சி வகுப்பில் தமிழ் எழுத்துக்கள் அறிமுகம், இலக்கணம், மரபுத் தொடர்கள், சொற்கள் உருவாக்குதல், குறிப்பு எடுத்தல், உரையாடல், மொழிபெயர்ப்பு, கட்டுரை, கையெழுத்து எழுதுதல், வாசித்தல், பேசுதல் போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டன.

இப்பயிற்சி வகுப்பில் இந்திய வனப்பணி அலுவலர் திரு நிஹர் இரஞ்சன் இ.வ.ப. (Thiru Nihar Ranjan I.F.S) கலந்துகொண்டு பயிற்சி பெற்றார். இப்பயிற்சி வகுப்பின் இயக்குநராக இந்திய மொழிகள் பள்ளித் துறைத்தலைவர் முனைவர் வே.சா. அருள்ராஜ் அவர்களும், ஒருங்கிணைப்பாளராக முனைவர் இரா. முரளிதரன் அவர்களும் செயல்பட்டனர். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முனைவர் ஆ. கார்த்திகேயன் (அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறை), முனைவர் சா. இராதாகிருட்டிணன் (மொழிபெயர்ப்புத் துறை), முனைவர் எச். சித்திரபுத்திரன் (அகராதியியல் துறை) ஆகியோர் பயிற்றுநர்களாகச் செயல்பட்டனர்.



- இந்திய மொழிகள் பள்ளி

## ஏப்பிரல் '04 இல்.... முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

| ஆய்வாளர் பெயர் / துறை | தலைப்பு | வாய்மொழித்தேர்வு நடைபெற்ற நாள் |
|---|---|---|
| 1. அ. சேவியர் நாட்டுப்புறவியல்துறை | நாட்டுப்புறத் தகவல் தொடர்பு முறைமையும் சென்றமையும் தன்மையும் | 16.04.2004 |

- தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு

# தமிழ்ப் புத்தாண்டு
# நூற்காட்சி விழா – சிறப்பு விற்பனை




தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடும் வகையில் நூற்காட்சி, சிறப்பு விற்பனைத் தொடக்க விழா 14.04.2004 அன்று மாலை 4.00 மணிக்குத் தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. 2003ஆம் ஆண்டு புதிதாக வெளியிடப்பெற்ற நூல்களை எழுதிய நூலாசிரியர்களைப் பாராட்டும் விழாவாகவும் இவ்விழா ஏற்பாடு செய்யப்பெற்றது. இவ்விழாவில் பதிப்புத்துறை இயக்குநர் (பொ) முனைவர் ஆ. இராமநாதன் வரவேற்புரை நல்கினார். பின்னர் அவர் 2003 ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களின் நூலாசிரியர்கள் மற்றும் நூல்களை அறிமுகம் செய்தார். துணைவேந்தர் அவர்கள் நூலாசிரியர்களுக்குப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பு செய்தார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத் திட்டக்குழு உறுப்பினர் மருத்துவர் சு. நரேந்திரன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பேரா.து. சீனிச்சாமி, பேரா. சே. பிரேமா மற்றும் திருமிகு. சீ. இராமதாசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நூலாசிரியர்கள் மருத்துவர் ஞா. ராஜராஜேஸ்வரி, பேரா. க. ரத்னம், முனைவர் ஆ. கார்த்திகேயன் ஆகியோர் நூலாசிரியர்கள் சார்பாக ஏற்புரை வழங்கிச் சிறப்பித்தனர்.



இறுதியாக, மாண்பமை துணைவேந்தர் தலைமையுரை ஆற்றினார். தமிழுக்கு வளம் சேர்க்கும் அரிய பணிகளாகக் களஞ்சியம், அகராதி போன்ற நூல்களையும், அறிவியல், பொறியியல், மருத்துவம் போன்ற அறிவியல் தமிழ் நூல்களையும் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுச் சாதனை படைத்துள்ளது என்றும் 2004 - 05 ஆம் ஆண்டில் 35 புதிய நூல்களை வெளியிடத் திட்டமிட்டுள்ளது என்றும் கடந்த 3 ஆண்டுகளில் பதிப்புத்துறை ரூ. 60 இலட்சம் மதிப்புள்ள நூல்களை விற்பனை செய்துள்ளது என்றும் இது மக்களிடையே பல்கலைக்கழக நூல்களுக்குக் கிடைத்துவரும் வரவேற்பைக்காட்டுகிறது என்றும் குறிப்பிட்டார்.



இவ்விழாவின் இறுதியில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) திரு இரா. ஜெயக்குமார் அவர்கள் நன்றி கூற விழா இனிதே முடிவுற்றது.

- முனைவர் ஆ. இராமநாதன்,
பதிப்புத்துறை

# டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு

இந்திய மொழிகள் பள்ளியின் சார்பில் டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு 05.04.2004 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் மொழிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. சொற்பொழிவு நிகழ்ச்சி இசைத்துறை மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது.

இந்திய மொழிகள் பள்ளித் துறைத்தலைவர் முனைவர் வே.சா.அருள்ராஜ் வரவேற்றுப் பேசினார். அவர்தம் உரையில் இவ்வறக்கட்டளை நிறுவியதன் நோக்கத்தினையும் டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பினையும் அதனைத் தொடர்ந்து அவர் ஆற்றிய கல்விப் பணியினையும் சுருக்கமாகக் குறிப்பிட்டுப் பேசினார்.

இந்நிகழ்ச்சிக்கு மொழிப்புலத் தலைவரும் இலக்கியத்துறைப் பேராசிரியருமான முனைவர் து.சீனிச்சாமி அவர்கள் தலைமை தாங்கித் தலைமையுரை ஆற்றினார்கள். அவர்தம் தலைமையுரையில் செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார் அவர்களைப் பற்றியும் அவர் தமிழ்மொழிக்கு (குறிப்பாகச் சிறுகதை, அகராதியியல், இலக்கணம்) ஆற்றிய அரும்பெரும் செயல்களையும் தமிழ் உணர்வின் பன்முக பரிணாமங்கள் தமிழ்நாட்டில் வளர்ந்த வரலாற்றினையும் எடுத்துரைத்தார். மேலும் தமிழ்நாட்டில் தமிழ்மொழிக் கல்வியின் நிலை பற்றியும் தற்போதுள்ள நிலையில் செந்தமிழ்க் காவலர் தமிழுக்குச் செய்த அரும்பணிகளை இந்நாளில் நினைத்துப் பார்க்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் என்பதனையும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து அறக்கட்டளைச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவதற்குத் திருவையாறு அரசர் கல்லூரி முதல்வரும், இலக்கியத்துறைத் தலைவருமான பேராசிரியர் முனைவர் சண்முக செல்வகணபதி அவர்கள் திராவிட மொழி பக்தி இலக்கியங்களில் இசை இலக்கியங்கள் என்னும் பொருண்மையில் இசைத் தமிழ் இலக்கியங்களைக் கற்பிக்கும்பொழுது அதன் இசை வடிவங்களை விவரித்தும், பாடியும் பண் அமைத்தும், கட்டளை அடிப்படையில் பாட வேண்டிய மரபினை விரிவாகக் கூறினார்கள். தமிழிசை வளர்ச்சிக்குத் தஞ்சைத்தரணி எவ்வாறு சிறந்து விளங்கியது எனவும் தமிழாய்வு உலகில் இசை ஆய்வுகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு எனவும் நாட்டியத்தமிழ் ஆய்வுகளே இல்லை என்று டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியாரும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளதை நினைவு கூர்ந்தும் சுட்டிக் காட்டினார். திராவிட மொழிகளில் குறிப்பாகத் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் இசை இலக்கியங்களின் வளர்ச்சியினை மிக அழகாக விவரித்துக் கூறினார். இம்மொழிகளில் இசை இலக்கியங்களுக்குத் தஞ்சை நால்வர் செய்த அரும்பணிகளையும் இசை ஆய்வு மையமாகத் தஞ்சாவூர் திகழ்ந்திருந்த வரலாற்றினையும் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

இசை வடிவங்களை ஆசிரியர்கள் கற்பிக்கும்போது பாடிக் கற்பிக்காமல் படித்துக் கற்பிக்கும் அவலச் செயலை அவர் வன்மையாகக் கண்டித்துக் கூறினார். மேலும் தமது உரையில் திருவையாற்றில் நடைபெறும் தியாகராசர் இசைவிழாவில் தெலுங்குமொழி இசை இலக்கியங்களின் பங்கு பற்றியும் குறிப்பிட்டுச் சென்றார். மேலும் கன்னட நாட்டில் நிலவிய வீர சைவ இயக்கம் பற்றியும் மலையாள நாட்டில் கதகளி இசை இலக்கியங்கள் பற்றியும் அது சமஸ்கிருதத்தோடு கொண்டிருந்த தொடர்பு பற்றியும் விரிவாகக் கூறி இசை இலக்கிய ஆய்வில் அதிகமான ஆய்வுக் களங்கள் உள்ளன என்றும் இப்பொழுது முதல் காலடிதான் வைத்துள்ளோம் என்றும் கூறி இவ்விலக்கியங்களில் மேலும் ஆழ்ந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனக் கூறித் தனது சிறப்புச் சொற்பொழிவினை நிறைவு செய்தார்.

இறுதியில் இவ்வறக் கட்டளையினை நிறுவிய திரு.அ.சபாபதிச் செட்டியார் அவர்கள் ஏற்புரை வழங்கினார்கள். அவர்தம் ஏற்புரையில் சொற்பொழிவுகளை இதுநாள் வரை இந்திய மொழிகள் பள்ளி மிகச் சிறப்பாக நடத்திவருவதை நினைவு கூர்ந்து பேசினார். மேலும், நிகழ்ச்சிக்கு வந்திருந்து சிறப்பித்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் வைத்தியலிங்கம், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், கல்விசாரா அலுவலர்கள், மாணவ மாணவியர், அ.சிதம்பரநாதன் செட்டியார் குடும்பத்தினர், நகரப் பிரமுகர்கள், புகைப்படத் தொலைக்காட்சிப் பிரிவினர் அனைவருக்கும் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியினை இந்திய மொழிகள் பள்ளியின் முனைவர் இரா.முரளிதரன் தொகுத்தளித்து நன்றியினையும் தெரிவித்தார். நிகழ்ச்சி நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.

**- முனைவர் வே.சா. அருள்ராஜ்,**
இந்திய மொழிகள் பள்ளி.


இ.அ.ப. மட்டும்

நூலஞ்சல்

நிருவாக அலுவலர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

# தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

## தமிழிசைக் கருத்தரங்கம்



தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையின் சார்பில் இசையும் அறிவியலும் என்ற தலைப்பிலான தமிழிசைக் கருத்தரங்கம் மார்ச் 17, 18 தேதிகளில் நடைபெற்றது.

கருத்தரங்கத் தொடக்க விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி, "நம் இசை பழமையான மரபிசை; ஆன்மிக இசை; அறிவியலுடன் தொடர்புடைய இசை" என்றார்.

தமிழ்ப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறைத் தலைவர் மருத்துவர் சே.பிரேமா, மூளை நரம்பியல் நிபுணர் டாக்டர் சுப்புலெட்சுமி நடராஜன் ஆகியோர் "இசையும் மருத்துவமும்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினர்.

வியாழக்கிழமை நடைபெற்ற கருத்தரங்க நிறைவு விழாவில் பேராசிரியர் பாவலரேறு பாலசுந்தரனார் பேசினார். பின்னர் சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறைப் பேராசிரியர் எஸ்.ஏ.கே.துர்கா சிறப்புரையாற்றினார். இசைத்துறைத் தலைவர் இ.அங்கயற்கண்ணி வரவேற்றார். மாதவி நன்றி தெரிவித்தார்.

## ஏப்பிரல் 2004இல் நடைபெற்ற நிகழ்வுகள்

| | |
|---|---|
| 02.04.2004 | - பேரவைக் கூட்டம் |
| 02.04.2004 | - ஆட்சிக்குழுக் கூட்டம் |
| 05.04.2004 | - பாஷா மந்தாகினி - கலந்துரையாடல், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை |
| 05.04.2004 | - இந்தியமொழிகள் பள்ளி - அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| 07.04.2004 | - இலக்கியத்துறை - முதுகலை மாணவர் விழா |
| 08.04.2004 | - எம்.ஏ.வகுப்புகள் - துறைத்தலைவர்களுடன் கலந்துரையாடல் |
| 11.04.2004 | - தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர் விடுதிவிழா |
| 14.04.2004 | - தமிழ்ப் பல்கலைக்கழகம் - பதிப்புத்துறை - நூற்காட்சி விழா - விற்பனை |
| 20.04.2004 | - இலக்கியத்துறை - காசியா நயினார் முகமது அறக்கட்டளை |
| 23.04.2004 | - நாட்டுப்புறவியல்துறை - களம் - கருத்தரங்கு |
| 27.04.2004 | - மாணவியர் விடுதி - குழுக் கூட்டம் |
| 28.04.2004 | - நாடகத்துறை - அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| 29.04.2004 | - மொழிபெயர்ப்புத்துறை - பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| 29.04.2004 | - நாடகத்துறை - அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| 30.04.2004 | - ஆய்வுக்குழுக் கூட்டம் |

"பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன"
- முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்

பதிப்பாசிரியர் : இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை
அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் - 613 001